(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
TIRUCHENGODE
**STC.No. 99/2022**

Deposition of PW1 Cross continuation

Name :செந்தில்குமார்(Complainant)

Father's Name :
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 07.02.2024

**Both accused present**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நான் எனது முதல் விசாரணை பிரமான பத்திரிக்கையில் எதிரியிடம் 27.07.2020 தேதிக்கு முன்பே பலமுறை அசல் தொகையை திரும்ப தர கேட்டுக்கொண்டதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் பலமுறை கேட்டேன். அந்த காலகட்டத்தில் எனக்கு பணம் தேவை இருந்ததால் தான் பணத்தை திரும்ப தரச்சொல்லி கேட்டேனா என்றால் ஆமாம். அவ்வாறு கேட்டபோது எதிரிகள் என்ன சொன்னார்கள் என்றால் ஒரு வருடத்தில் திருப்பி தருவதாகசொன்னார்கள்.

2. என் வசம் எதிரிகள் எழுதிக்கொடுத்த புரோநோட்டு இருந்த நிலையில், எதற்காக அதனை கொடுத்துவிட்டு காசோலையை வாங்கிக்கொண்டேன் என்றால், எதிரிகள் தான் என்னிடம் காசோலையை கொடுத்து பணம் எடுத்துக்கொள்ள சொன்னார்கள். அவ்வாறு காசோலை கொடுக்கப்பட்ட தேதியான 27.07.2020 வரைக்கும் உண்டான வட்டியை கணக்கிட்டு, அந்த தொகையை என்னிடம் கொடுத்துவிட்டு அதன் பிறகு தான் காசோலை கொடுத்தாரா என்றால் ஆமாம். என்னிடம் கடன் பெற்ற தேதியிலிருந்து மேற்படி 27.07.2020 தேதியானது 17 மாதங்கள்

பிந்தையது என்றால் சரிதான். அந்த 17 மாதங்களுக்குரிய வட்டி முழுவதையும் எதிரி செலுத்திவிட்டாரா என்றால் செலுத்திவிட்டார். எனது முந்தைய குறுக்குவிசாரணையின்போது ஒருவருடம் மட்டுமே எதிரிகள் வட்டி கொடுத்ததாக சொல்லிவிட்டு தற்போது 17 மாதங்கள் கொடுத்தாக முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது மாமனார் பெயர் என்ன என்றால் செங்கோட்டையன் என்பதாகும். சதீஷ் என்கிற நடராஜனுக்கு அவர் தான் தந்தை என்றால் சரிதான். காசோலை கொடுத்த 27.07.2020 தேதியிலிருந்து அக்காசோலையில் தேதி இடப்பட்டு கொடுத்த 27.08.2021 என்பது 13 மாதங்கள் என்றால் சரிதான். அந்த 13 மாதங்களுக்கு வட்டி கணக்கிட்டால் ரூ.3,90,000/– வருகிறது என்றால் சரிதான். காசோலை கொடுத்த பிறகு நான் அதை வசூலுக்கு தாக்கல் செய்த காலம் வரையிலான 13 மாதங்களுக்கு எதிரிகள் வட்டி கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மாதாமாதம் கொடுத்தார்கள். என்னிடம் யார் யார் புரோநோட் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் 1வது மற்றும் 2வது எதிரி ஆகியோர் தனித்தனியாக புரோநோட் எழுதி கொடுத்தார்கள். நான் எனது முதல் விசாரணையில் ஒரே ஒரு புரோநோட் மட்டுமே எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் தனித்தனியே எனக்கு புரோநோட் எழுதிகொடுத்தார்கள். எதிரிகள் எனக்கு புரோநோட் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. மேற்படி இரண்டு புரோநோட்டுகளை தலா ரூ.20,00,000/–ற்கு எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை. ஆளுக்கு ரூ.10,00,000/–ற்கு எழுதி கொடுத்தார்கள். என்னை பொறுத்தளவில் ரூ.20,00,000/– எனக்கு பெரிய தொகையா என்றால் ஆமாம். கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் எனக்கும் எதிரிகளுக்கும் இடையில் வட்டி செலுத்துவது சம்பந்தமாக பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. அவர்கள் முறையாக வட்டி செலுத்தினார்கள். எதிரிகள் கொடுத்ததாக சொல்லும் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்தது யார் என்றால் அவர்களின் நண்பர்களான மகுடேஸ்வரன் மற்றும் அன்பரசு ஆகியோர் ஆவர்.

5. நான் எனது புகாரிலும், எதிரிகள் ஒரு புரோநோட் எழுதிக்கொடுத்ததாக மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல எனது அறிவிப்பிலும் ஒரு புரோநோட் எழுதிக்கொடுத்ததாக மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.12.2021ம் தேதியிட்டு நான் மோகன் மற்றும் முரளிமனோகர் ஆகிய இருதனிநபர்களுக்கு மட்டும் தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த காசோலை 27.07.2020 தேதி முதல் என் வசம் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு காசோலை பற்றிய அனைத்து விபரங்களும் நன்றாக தெரியும் என்றால் அனைத்து விபரமும் தெரியாது ஓர் அளவிற்கு தெரியும்.

காசோலை பற்றிய முழுவிபரங்கள் எதுவும் தெரியாமல் நான் அதனை வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

6. என்னிடம் வழங்கப்பட்ட காசாலை ஒரு கூட்டாண்மை நிறுவனத்தினுடைய காசோலை என்றால் சரிதான். அந்த காசோலை வழங்கப்பட்ட தேதியிலேயே அது ஒரு நிறுவனத்தினுடைய காசோலை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது பொய் என்றாலும் காசோலை பற்றிய விபரம் எனக்கு தெரிந்திருந்தால் நான் வழக்கறிஞர் அறிவிப்பில் அந்த நிறுவனத்தின் பெயரை குறிப்பிட்டுஅனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்னும் நோக்கோடுதான் நான் காசோலையை வசூலுக்குபோட்டு, அறிவிப்பு அனுப்பி பின்னிட்டு காலம்தாழ்த்தி Rejoinder அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

7. 2015ம் வருடத்தில் நான் எதிரிகளுக்கு ரூ.13,00,000/– கடன் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எதிரிகள் இருவரும் என்னுடைய மைத்துனர் சதீஷ் என்கிற நடராஜன் மீது 09.08.2020 தேதியில் காவல் துறையில் புகார் அளித்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சதீஷ் மற்றும் இந்த வழக்கின் எதிரிகள் பள்ளி பருவம் முதலே நண்பர்கள் என்றால் சரிதான். எனக்கு என் மைத்துனர் சதீஷ் உடன் ஏதேனும் தகராறு உள்ளதா என்றால் கிடையாது. எப்போதும் சுமூகமான உறவு நிலையில் தான் நான் சதீஷ் உடன் இருந்தேனா என்றால் ஆமாம்.

8. சதீஷ் தனது தேவைக்காக என்னிடம் அவ்வபோது பணம் வாங்கி திரும்ப கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தாரா என்றால் இல்லை. சதீஷ் தன்னுடைய தொழில் சம்பந்தப்பட்ட விவகாரங்களை பற்றியெல்லாம் என்னோடு விவாதிப்பாரா என்றால் விவாதிக்கமாட்டார். சதீஷ் என்ன தொழழில் செய்கிறார் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்பதை பற்றியெல்லாம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. எதிரிகளின் தொழில் தேவைக்காக தான் நான் அவர்களுக்கு பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். எதிரி நிறுவனத்தில் மோகன் மற்றும் முரளிமனோகர் ஆகியோர் மட்டும் தான் பங்குதாரர்களா என்று தெரிந்துகொண்டு தான் பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். எதிரி நிறுவனத்தின் கூட்டாண்மை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது கிடையாது. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதி எதிரி நிறுவனம் நான் புகாரில் குறிப்பிட்ட முகவரியில் தான் செயல்பட்டதா என்றால் ஆமாம். எதிரிகள் இருவரின் நிதிநிலைமை, நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ஆகியவை பற்றி தெரிந்துகொண்டுதான் நான் அவர்களுக்கு கடன்கொடுத்தேனா என்றால் ஆமாம்.

10. நான் எதிரிகளின் நிறுவனத்திற்கு நேரில் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். 27.07.2020 தேதியன்றும் எதிரி நிறுவனம் செயல்பாட்டில் தான்

இருந்ததா என்றால் ஆமாம். அது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும், நான் அங்கு எப்போது வேண்டுமானாலும் செல்வேன். எனக்கு எதிரிகள் காசோலை கொடுத்த பிறகும் எதிரி நிறுவனம் அதே முகவரியில் தான் செயல்பாட்டில் இருந்து வருகிறதா என்றால் இன்றைய தேதிவரையிலும் அது அதே இடத்தில் தான் செயல்பட்டு வருகிறது. இந்த புகாரில் சொல்லியுள்ள கதவு எண் 116, கருவேப்பம்பட்டி, திருச்செங்கோடு என்னும் முகவரியில் தான் அந்த நிறுவனம் செயல்படுகிறதா என்றால் ஆமாம். இன்றுவரையிலும், அந்த நிறுவனம் செயல்படுவது பற்றி நான் நேரடியாக சென்று பார்த்தவகையில் எனக்கு தெரியுமா என்றால் நான் தற்போது எல்லாம் அங்கு செல்வது கிடையாது. தற்போது நான் அங்கு செல்லாததால் தான் எனக்கு அது பற்றி தெரியாதா என்றால் ஆமாம்.

11. நான் ஏதேனும் பைனான்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளேனா என்றால் முன்பு இருந்தேன். அந்த பைனான்ஸ்ன் பெயர் என்ன என்றால் குமரன் பைனான்ஸ் ஆகும். அதில் எத்தனை சதவீத பங்குகள் இருந்தது என்றால் 10 சதவீதம் இருந்தது. எவ்வளவு தொகைக்கு எனக்கு பங்கு இருந்தது என்றால் ரூ.1,00,000/-ற்கு இருந்தது. எதிரிக்கு கடன்கொடுத்த சமயத்தில் அவர்களுடைய அடையாள அட்டைகளை வாங்கி சரிபார்த்தேனா என்றால் பார்த்தேன்.

**எதிர் தரப்பின் வழக்கறிஞரின் வேண்டுதலின் பேரில் குறுக்கு விசாரணை உணவு இடைவேளைக்கு பிறகு ஒத்திவைக்கப்படுகிறது.**

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
TIRUCHENGODE
**STC.No. 99/2022**

Deposition of PW1 Cross continuation

Name :செந்தில்குமார்(Complainant)

Father's Name :
Village :
Taluk :
Calling :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 07.02.2024

**Both accused present**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:(உணவு இடைவேளைக்குபின்)**

**1.** எதிரிகள் எனக்கு எத்தனை மாதங்கள் வட்டி செலுத்தினார்கள், எவ்வளவு பாக்கி செலுத்தவேண்டி இருந்தது என்பது பற்றியெல்லாம் விபரமாக நான் எனது வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வழக்கிற்கு முன்பே எனக்கு வட்டி செலுத்திவிட்டதால் நான் அது பற்றி வழக்கில் குறிப்பிடவில்லை. இந்த வழக்கில் சொல்லியுள்ள கடனை எந்த இடத்தில் வைத்து எதிரிகைள் பெற்றுக்கொண்டார்கள் என இந்த வழக்கு ஆவணங்கள் எவற்றிலும் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். என் வீட்டில் வைத்து பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். பலமுறை கடனை திரும்ப கேட்டும் எதிரிகள் கொடுக்காத நிலையில், அவர்களுக்கு சட்ட அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை.

2. என் சார்பாக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றியும் அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் பற்றியும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

எதிரிகளின் கடைக்கே சென்று அவ்களிடம் பணத்தை திரும்ப தரச்சொல்லி கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். 27.07.2020 தேதிக்கு முந்தைய மாதங்களில் நான் மேற்சொன்னவாரு அவர்கள் கடைக்கு சென்று கேட்டேனா என்றால் கேட்டேன். மே, ஜூன் மாதங்களில் கூட சென்றுகேட்டேனா என்றால் கேட்டேன். மாத வட்டியாக எதிரிகள் எவ்வளவு செலுத்தினார்கள் என்றால் ரூ.30,000/– செலுத்தினார்கள்.

3. அந்த மாத வட்டி எனக்கு ஒருவகையான வருமானம் என்றால் சரிதான். அந்த வருமானம் எனது விவசாய வருமானத்தோடு சேராது என்றால் சரிதான். எதிரியின் நிறுவனத்தை பற்றி எனக்கு எல்லா விபரமும் எனக்கு தெரியும் என்று நான் சொன்னது பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவருடைய வீட்டு முகவரி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் எனது புகாரில் முகவரியில் தான் எதிரிகள் குடியிருக்கிறார்களா என்றால் மோகன் அங்கு தான் குடியிருக்கிறார். முரளியின் முகவரியாக நான் அவர் கடையின் முகவரியை தான் குறிப்பிட்டுள்ளேன். நான் முரளிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பையும் மேற்படி கடை முகவரிக்கு தான் அனுப்பினேன் என்றால் சரிதான்.

4. நான் முதல் முறை அறிவிப்பு அனுப்பியபோதே காசோலை நிறுவனத்தினுடையது என்று தெரிந்திருந்தால் அதை ஒரு தரப்பினராகசேர்த்து அந்த முகவரிக்கும் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் அப்போது அனுப்பவிடுபட்டுவிட்டதால் பின்னிட்டு Rejoinder ஆக அனுப்பினேன். நான் இவ்வழக்கில் சொல்லியுள்ளதுபோல எதிரிகள் என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் அதற்காக காசோலை எனக்கு வழகங்கவில்லை என்றாலும் எனது மைத்துனர் சதீஷ்ன் தூண்டுதலின்பேரில் வெறும் பெயரளவிற்கு இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றாலும் அதனால் தான் காசோலை நிறுவனத்தின் பெயரில் இருப்பது கூட தெரியாமல் முதல் சட்ட அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பற்றிய சரியான விபரம் தெரியாததால் தான் மோகனுக்கு அனுப்ப வேண்டிய அறிவிப்பை அவர் கடைக்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

5. நான் வருடாவருடம் வருமானவரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் எதிரிகளுக்கு கடன் கொடுத்தேன். அதனால் அதனை வரிகணக்கில் காட்டவில்லை. எதிரிகள் எனக்கு செலுத்திய வட்டியை கணக்கிட்டு அதை வருமானமாக எனது வரிக்கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் காட்டவில்லை. இது பொய் வழக்கு என்றாலும் நான் எதிரிகளுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளைப்பற்றியோ அவர்கள் நிறுவனத்தை பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. அவர்கள் வரவு செலவு கணக்கு பற்றி எனக்கு தெரியாது என்றால் அவர்கள் தொழில் செய்தது தான்

தெரியும், அவர்கள் கடை வரவு செலவு பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் பணவசதி பற்றி தெரிந்துகொள்ளாமல் நான் அவர்களுக்கு கடன் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எதிரி மோகனின் தந்தை என் மைத்துனருக்கு எதிராக காவல் துறையில் கொடுத்த புகாருக்கு பழிவாங்கும் விதமாக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகார் பற்றியெல்லாம் எனக்கு தெரியாது. நான் கடனே கொடுக்கவில்லை என்பதால் தான் எதிரிகள் வட்டி செலுத்திய விபரம் பற்றி சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் சொல்லியுள்ள தேதியில், விதத்தில், அதில் கண்ட காரணங்களுக்காக இந்த வழக்கு காசோலை எனக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மாணிக்கம் கொடுத்த புகார் பற்றி தெரியும் என்றும் முந்தைய குறுக்கு விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாணிக்கம், சதீஷ் உடன்செய்து வந்த வரவு செலவிற்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. அந்த புகார் பற்றி எனக்கு தெரியும் என்று ஒப்புக்கொண்டால் அதற்கு பிறகு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக கருதப்படும் என்பதால் தான் நான் அந்த புகார் பற்றி தெரியாது என் மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

7. மாணிக்கம் என் மைத்துனர் மீது 09.08.2020 தேதியில் காவல் துறையில் புகார் தாக்கல் செய்தார் என்றாலும் அதன் பேரில் 910/2020 என்கிற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றாலும் சரியல்ல. 16.10.2023 ம் தேதியில் செய்த குறுக்கு விசாரணையின்போது சதீஷ் எதிரிகளோடு வியாபார கூட்டில் இருப்பதாக சொல்லிவிட்டு தற்போது அவர் தொழில் பற்றி தெரியாது என முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சதீஷ்ன் வரவு செலவு பற்றி எனக்கு தெரியும் என ஒப்புக்கொண்டால் அவரின் தூண்டுதலின்பேரில் தான் இவ்வழக்கு எதிரிகளை பழிவாங்குவதற்காகபோடப்பட்டது என தெரியவரும் என்பதால் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எந்தவிதமான சட்டப்படியான மறுபயனுக்காக வேண்டி இவ்வழக்கு காசோலை கொடுக்கப்படவில்லை என்பதால் இவ்வழக்கின் எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டியவர்கள் என்றால் சரியல்ல